# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2012, சனவரி மாதம் 20 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.25*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

## 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டம்

[2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ.கூட்டி 18/2010

### இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) யைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இராமகிருஷ்ண சாரதா மிஷன் - இலங்கைக் கிளை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத் தும் நோக்கத்திற்காக (123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இதற்குமுன்னர் இலங் கையில் பதிவுசெய்யப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும் ; அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக்கிளை) (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இராமகிருஷ்ண சாரதா மிஷன் - இலங்கைக் கிளையின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இராமகிருஷ்ண

2-PL 005068 -990 (2010/07)

சாரதா மிஷன் (இலங்கைக் கிளை)" என்ற பெயர்மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இந்து சமூகத்தினுள் இந்துமத மற்றும் அதன் எல்லா மத நூல்களின் கற்கையையும் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஷ, ஸ்ரீ சாரதாதேவி மற்றும் சுவாமி விவேகானந்தா என்போரின் போதனைகளை தெரிவித்தலும் மேம்படுத்தலும் ;

(ஆ) ஒப்பிடக்கூடிய தன்மைத்தான வேதவேதாந்த சாத்திர கற்கையை அதன் விரிவான வடிவத்தில் மேம் படுத்துதலும் எல்லா சமயங்களின் ஒற்றுமையைக் கொண்டுவருவதில் உதவுதலும் ;

(இ) இந்துப் பெண்கள் மற்றும் சிறுவர்களின் சமய, கல்வி, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை மேம் படுத்தல், ஊக்குவித்தல் மற்றும் உதவுதல் ;

(ஈ) இந்து சமூகத்திற்கென சமயம் மற்றும் கல்வி நிறுவனங் களையும், அநாதை இல்லங்கள், ஆய்வுகூடங்கள், வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் வேறு தரும நிறுவனங்களையும் தாபித்தல், பேணுதல் அத்துடன் முகாமைசெய்தல் ;

(உ) இந்துசமய நிறுவனங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் அத்துடன் அறிவின் எல்லாக் கிளை களிலும் மக்களிடையே கல்விசார் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களின் மேம்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்காக விரும்பத் தக்கதெனக் கருதக்கூடிய புத்தகங்கள், நாளிதழ்கள், பருவஏடுகள் மற்றும் சஞ்சிகைகள் அச்சிடுதல் அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலம் வெளியிடுதலும் விநியோகித்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகின்ற நோக்கத்திற்காக இந்துசமய ஆளணியினருக்காக இலங்கையினுள் அல்லது வெளியே மாநாடுகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் குழு கற்கைகளை நடாத்துதலும், அனுசரணையளித்தலும் ; அத்துடன்

(ஏ) வெளிநாட்டிலோ அல்லது உள்ளூரிலோ கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் வேறு ஏதேனும் நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்புக்களுடன் இந்து சமூகத்தின் முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கல்கத்தா, டக்ஷ்சினேஸ்வர் இராமகிருஷ்ண சாரதா மிஷனின் ஆளும் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தலைவர் மற்றும் செயலாளர், உபதலைவர் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு பதவிதாங்குநர்கள் ஆகியோரைக்கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால் (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளுக்கமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கல்கத்தா, டக்ஷ்சினேஸ்வர், இராமகிருஷ்ண சாரதா மிஷனின் தலைவராக தற்போது பதவிவகிக்கின்ற ஆள் கூட்டுத்தாபனத்தின் போஷகராதல் வேண்டும்.

(3) முதலாவது குழு, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய தத்துவத்தில் பின்வருவன அடங்கும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை கொள்ளவும், வைத்திருக்கவும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும், ஈடுவைக்கவும், பிணைவைக்கவும், விற்கவும், கொடுத்து மாற்றவும் அல்லது வேறு வகையில் பராதீனப்படுத்தவும், பாரபந்தப்படுத்தவும் அல்லது கையுதிர்க்கவும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்துவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளை நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தால் அது சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாகவோ அல்லது பொருளாகவோ கொடைகள், நன்கொடைகள் மற்றும் விருப்பாவணக்கொடைகளை ஏற்பதற்கும் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்யவும் ஏதேனும் வங்கியில் நடைமுறைக் கணக்குகள், வைப்புக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணவும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய முறையிலும் கூட்டுத்தாபனம் பொருத்தமானதென கருதக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்பு மீது பணத்தை கடன்பெறவும் முதலீடுசெய்யவும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தப்படும் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமனஞ்செய்யவும் தொழிலுக்கமர்த்தவும், இடமாற்றஞ் செய்யவும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கவும் அவர்களை விலக்கவும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் எல்லாக் கருமங்களுக்காக அல்லது அவற்றில் ஏதேனுமொன்றிற்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் மற்றும் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவிவிலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும் ;

(இ) குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும் அதனது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் மற்றும் குழுவின் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும்போதும் அக்கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அத்துடன் அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரல்களும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நிறைவேற்றுதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும், அதன் நிதியங்களின் கட்டுக் காப்பும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதியெதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப்போன்ற அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எப்போதும் கூட்டுத் தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, அறுதிமாற்றம், நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணம் அல்லது மானியக்கொடை, அல்லது ஏதேனும் நிதி முதலீடு என்றவகையாக இதற்குமுன்னர் அல்லது இதனகத்துப்பின்னர் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலிலும் நிறைவேற்றுதலிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பின ராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றித ழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத் தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத் தினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாப னத்தின் தலைவர், செயலாளர் அல்லது குழுவால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆள் முன்னிலையி லன்றி எச்சாசனத்திலும் பொறிக்கப்படுதலாகாது ; அத்துடன் அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாச னத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவ ராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்பட வுள்ளனவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று சங்கத்திற்கு வருமதி யாகவுள்ள எல்லாத் தனிசுகளும் சங்கத்தால் செலுத்தப்படற் பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச் சட்டத்தின் நோக்கங்களிற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத் தப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புக்களை கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து வருமதியாக இருக்கக் கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையை செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

பணங்கள் ஆதனம் என்பவற்றின் பிரயோகம்.

**12.** கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும் இதன்கண் எடுத்துக்காட்டப் பட்டுள்ளவாறாக அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் எந்தவொரு பாகமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கிலாபம் மிகையூதியம், இலாபம் என்றவகையிலோ அல்லது எத்தன்மையதுமான வேறுவகையிலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதலோ கைமாற்றப்படுதலோ ஆகாது.

அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

**13.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவின், மானியக்கொடையின், கொடையின், இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத் தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**14.** கூட்டுத்தாபனமானது கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிக்கப்படுதலாகாது. ஆனால் அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை யுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல் லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை

அல்லது இலாபத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது மான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான வேறு கழகம் அல்லது கழகங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப் படுதல் வேண்டும் அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப் படல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*பேணல்கள்.*

**16.** (1) சங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னதாக ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தன்மைத்தான ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், சான்றிதழ்களும் அல்லது வேறு சாசனங்களும் அல்லது ஆவணங்களும் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் இருப்பதாகவும் கூட்டுத்தாப னத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் ஆக்கப்பட்டு, வழங்கப்பட்டு அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) சங்கத்தினால் அல்லது சங்கத்திற்கு எதிராக தொடரப் பட்டதும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருப்பவையுமான வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், மேன்முறையீடுகள் மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகள் அற்றுப் போதலோ அல்லது முடிவாக்கப்படுதலோ ஆகாது என்பதுடன் கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடர்ந்து நடாத்தப்படலாம் அல்லது அமுலாக்கப்படலாம்.

(3) சங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட, சட்டரீதியாக கொள்வனவு செய்யப்பட்ட, கொள்ளப்பட்ட, குத்தகைக்குப் பெறப்பட்ட, கையுதிர்த்தல் நிலையிலுள்ள அல்லது வேறேதேனும் முறையில் மாற்றப்பட்ட அல்லது சங்கத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பில்

வைத்திருக்கப்படும், இச்சட்டம் தொடங்கும் திகதியன்று அதன் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள அசையும் அசையா ஆதனம் யாவும் நம்பிக்கைப் பொறுப்பு, அறவீடுகள், பொறுப்புக்கள், ஒதுக்கீடுகள், சேவகம் அல்லது வேறு பாரா பந்தங்கள் மற்றும் அத்தேதியின் அதனுடன் தொடர்புடைய இணைந்த அல்லது அதற்கு ஏற்புடையதான நியதிநிபந்தனைக் கமைவாக இச்சட்டத்தினால் தாபிக்கப்படும் கூட்டுத்தாபனத்தி னால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் அல்லது கூட்டுத்தாபனத் திற்காக நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய நாளன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தவிர்ந்த சங்கத்தின் எல்லா உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளும் கூட்டுத்தாபனத்தின் உரிமைகள் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17**. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்